**கவனிக்க.**-*2020.07.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2186 - 2020 ජූලි මස 24 වැනි සිකුරාදා - 2020.07.24

*2186 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 772 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூலை மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

769-B 82042-5,403 (2020/ 07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)

2017.06.21 ஆந் திகதிய 2024/35 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சை, பரீட்சை பெறுபேறுகளின் படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். மேலும் நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

3. **சம்பளம்**.- இலக்கம் 3/ 2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஏற்புடையதான சம்பள குறியீட்டு இலக்கம் MN-3-2016 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆகும்.

4. இந் நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பரீட்சையின் ஊடாக இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு அலுவலர் கட்டுப்படல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள்** :

(i) திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் மூன்று (03) ஆண்டுகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவர். அலுவலர்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் குறித்த முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அலுவலரின் வேலை, வருகை மற்றும் நடத்தை என்பன திருப்தி கரமானதாக உள்ளதென திணைக்களத் தலைவர் திருப்தியுறும் பட்சத்தில் மூன்று ஆண்டுகளின் இறுதியில் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிக்கையிட்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில் குறித்த அலுவலரின் நியமனம் உறுதிப்படுத்தப்படும்.

(ii) முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 வருடகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாரேனும் ஒரு அலுவலரை மாற்றுவதற்கு தேவைப்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைக்கு அமைவாக நியமனம் பெற்று 05 வருடங்கள் கடந்து செல்ல முன் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **தகைமைகள்**.- இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கான பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(அதற்கமைய 2002.08.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.08.24 ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப்படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகைமை காணப்படுகின்றது.)

(ஈ) **கல்வித் தகைமைகள் :**

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ. த.) பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ) **தொழில்சார் தகைமைகள் :**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன்றாண்டுகால டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் தொடர்பாக மூன்று (03) வருட கால டிப்ளோமா பாடநெறியை சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

(iii) நூலகவியல் தொடர்பாக மேற்குறிப்பிட்ட (i) அல்லது (ii) ஆம் தகைமையைவிட உயர் தகைமையைப் பெற்றிருத்தல் (அவ்வாறான தகைமைகள் குறித்த பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை நூலகர் சங்கம் ஆகியவற்றில் விசாரித்து இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.)

**குறிப்பு :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

(ii) எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பரீட்சை நடைமுறை.-** இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடம் | நேரம் | மொத்த புள்ளிகள் | சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (2) நுண்ணறிவுத்தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| (3) பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அமைந்துள்ளது :-

7.1 (01) **நூலகவியல்.-**

(1) ***நூலகங்களும் நூலகத்துவமும்*** :

நூலகங்களும் நூலக வரலாறும், புராதன மற்றும் நவீன உலகத்தின் பிரதான நூலகங்கள் ;

எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்கலாக எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும், பரிணாம வளர்ச்சியும் ;

அச்சிடல் கலையின் ஆரம்பமும், விரிவாக்கமும், நூலக மற்றும் சமூக அபிவிருத்தி விடயங்கள் மீதான தாக்கங்கள் ;

நூலகங்களின் வகைகள் :

விசேட நூலகம்.- அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்கள் சார்ந்த நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள் ;

கல்விசார் நூலகங்கள்.- பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள் ;

பாடசாலை நூலகங்கள் ;

பொது நூலகங்கள் ;

பிரிவெனாக்களின் நூலகங்கள் மற்றும் துறவிமட/சமய நிறுவனங்களின் நூலகங்கள்;

நூலகக் குழுக்கள்.- கட்டமைப்பு, தேவைப்பாடுகள் முக்கியத்துவம் மற்றும் தொழிற்பாடுகள்.

நூலக தொழிலுக்குரிய புலமைசார் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள்.- தேசிய மற்றும் சர்வதேச (இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா)

நூலகக் கட்டடங்கள்.- திட்டமிடல், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் :
* தற்போதுள்ள கட்டடமொன்றில் நூலகம் ஒன்றைத் தாபித்தல், அமைத்தல் அல்லது மேம்படுத்தல்

நூலகப் பொருட்களைப் பராமரித்தல், பேணிப் பாதுகாத்தல் (Conservation) மற்றும் காப்பீடு (Preservation)

இடர்கள் (Disasters) மற்றும் அனர்த்த முகாமைத்துவமும் (Disaster Management)

(2) ***அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்*** :

நூல்களின் வகைப்படுத்தல் நோக்கங்களும் நன்மைகளும்

இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத்திட்டங்கள் : துயி தசமதான பகுப்பாக்கம், சர்வதேச தசமதான பகுப்பாக்கத்திட்டம்

நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக் கோவை (AACR) முறைமை

நூல்களைப் பற்றிய விபரங்கள் :

AACR2 விதிமுறைகளைப் பயன்படுத்தி புள்ளிவிபரப் பட்டியலைத் தயாரித்தல்.

(3) ***நூலக வளங்களும் தகவல் சேவைகளும்*** :

பல்வகையான நூலக வளங்கள்

சேகரிப்பு அபிவிருத்தி, சேகரிப்பு அபிவிருத்திக் கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம்

நூலக வளங்களைத் தேர்ந்தெடுத்தல் உள்ளடங்கலான ஏற்புச் செயற்பாடுகள்:-

(i) நூலக வளங்களை தேர்ந்தெடுத்தலின் கோட்பாடுகளும், மூலகங்களும்;

(ii) ஏற்பு செயற்பாடுகள், செயலாக்கம் உட்பட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள்;

(iii) இருப்புக்களின் கணக்கெடுப்பும் அகற்றல் செயற்பாடுகளும்;

வெளியீடு, பதிப்புரிமை, தடைகள்;

நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Service);

வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்;

மக்கள் தொடர்பும் நூலகங்கள் தொடர்பான பிரச்சாரங்களும்.

(4) **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்** (Information Communication Technology)

நூலகங்களில் கணினிப் பயன்பாடு மற்றும் நூலக சேவைகள் மற்றும் அலுவலகங்களில் தகவல் தொழில்நுட்ப முக்கியத்துவம் மற்றும் பயனுறுதித்தன்மை

* மேற்படி 4 துறைகளும் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை அமைப்பிலான வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரமாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்.

7.2 (02) **நுண்ணறிவுத் தேர்வு**.- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் சிக்கலான வினாக்கள் தொடர்பிலான விண்ணப்பதாரியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகித்தலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் : (01) மணித்தியாலம்.

7.3 (03) **பொது அறிவு**.- தேசிய, பிராந்திய மற்றும் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான விண்ணப்பதாரிகளின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வைப் பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் : ஒரு (01) மணித்தியாலம்.

**குறிப்பு** :

நியமனத்திற்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்திசெய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையைக் கட்டாயமாகக் கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இக்கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் எந்தவொரு தபாலகம் அல்லது உப தபாலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை எதிர்காலத் தேவைக்காக தன்வசம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.) இப்பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எந்தவொரு அறவீடும் அறவிடப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் காசுக் கட்டளை அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. **விண்ணப்பப்படிவம்**.- ஏ4 (செ.மீ.21 x 29) (சாதாரண ஹாப்சீட்) அளவிலான தாளை உபயோகித்து,

(அ) இலக்கம் 1 முதல் இலக்கம் 3.5 வரையிலான பந்திகள் முதல் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 4 முதல் அதனடுத்து வரும் பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கருதும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்யும் போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரிப் படிவத்துக்கு ஏற்புடையதற்ற, உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் சரியாகப் பூர்த்தி செய்யாது முழுமைபடுத்தப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படாமையினால் ஏற்படும் இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாளிகளாவார்கள். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும் என்பதோடு, பூரணப்படுத்தப்படுகின்ற

விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதெனவும் சகல தகவல்களையும் உள்ளடக்கிய விண்ணப்பம் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பது பற்றியும் விண்ணப்பதாரிகளால் மீண்டும் பரீட்சித்துப் பார்க்கப்படுதல் வேண்டும். அவ்வாறில்லாது விடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

9.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்படுதல் பரீட்சார்த்திஇப்பதவிக்குரியதகைமைகளைக்கொண்டுள்ளார்என ஏற்றுக்கொள்ளப்படலாகாது.பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென அறியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

9.2 விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)" எனக் குறிப்பிடவும்.

9.3 விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், அரச நிரந்தரப் பதவி வகிக்கும் பதவிநிலை தரத்துடைய அலுவலரொருவரினால் சான்றுப்படுத்த வேண்டும்.

9.4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2020, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. 1503,
கொழும்பு.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின், அவ்விபரங்களுடன், தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் நிழற்படப் பிரதியொன்றை உடனடியாக அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தின் ஊடாக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்குரிய பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக்கு தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. **பரீட்சைப் பெறுபேறு**.- இவ்வறிவித்தலின் 7.0 ஆம் பந்தியின் குறிப்புக்கமைய ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட

வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதே போன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு காரணத்தினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். எவ்வாறாயினும், ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு முடியாத அவ்வாறான பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டாது.

13. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.-விண்ணப்பப்படிவங்களைப் நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் போலியானது என தெரியவரும் சந்தர்ப்பத்தில் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

14. பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்படவேண்டும். அச்சட்டவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

15. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுபற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2020, யூலை 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

## OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE - 2019 (2020)

☐
(அலுவலக உபயோகத்திறகாக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் தெளிவாக எழுதவும்)

---

1. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

   1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

   1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

   2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

   2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் : பெண் - 1 ☐
   ஆண் - 0
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

   3.2 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

   3.3 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

   3.4 பிறந்த திகதி :

   ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

   3.5 2020.08.24 ஆந் திகதிக்கு வயது :-

   வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. .................... | ............ |
| 2. .................... | ............ |
| 3. .................... | ............ |
| 4. .................... | ............ |
| 5. .................... | ............ |

| பாடம் | தரம் |
|---|---|
| 6. .................... | ............ |
| 7. .................... | ............ |
| 8. .................... | ............ |
| 9. .................... | ............ |
| 10. .................... | ............ |

4.2 கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. .................... | ............ |
| 2. .................... | ............ |
| 3. .................... | ............ |
| 4. .................... | ............ |

4.3 பரீட்சை அறிவிப்பில் 6.0 (உ) பந்தியின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீங்கள் நூலகவியல் தொடர்பாக பெற்றுள்ள மூன்று வருடகால டிப்ளோமா/ தகைமை தொடர்பான விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(ii) டிப்ளோமா/ பட்டம் :----.
(iii) டிப்ளோமா/ பட்டம் வலுப்பெறும் திகதி :----.

5. ஏனைய தகைமைகள் :----------------------------------------------------------------------------------------------------------------------------------------.

6. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி யாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும்.) (ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

ஆம் ☐ இல்லை ☐ .......................................................

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய பணத்தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) |

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யாதிருத்தல் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகப் பூர்த்திசெய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் நிவர்த்தியாக பூர்த்திசெய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

(ii) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(iii) மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

(iv) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் ......................... ஆந் திகதி எனது முன்னிலையில் தமது கையொப்பத்தையிட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

10. திணைக்களத் தலைவரின் பரிந்துரை :
(தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் இப்பகுதி ஏற்புடையதாகும்.)

இவ்விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................... என்பவர் இத் திணைக்களத்தில் நிரந்தர பதவியில் சேவையாற்றுவதாகவும், இப் பரீட்சை அறிவித்தலின் பிரகாரம் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும், இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவாராயின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)
திகதி :----.

7-687

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)

2017.06.21 ஆந் திகதிய 2024/ 35 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க நூலகர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 இப்பரீட்சை பெறுபேறுகளின்படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். மேலும் நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம்**.- இல. 03/ 2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இற்கு ஏற்புடையதான சம்பளக் குறியீட்டு இலக்கம் MN-3-2016 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆகும்.

4.0 இந்நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

5.0 **சேவை நிபந்தனைகள்** :

(i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும் அலுவலர் ஒருவர் நியமனத் திகதியில் இருந்து ஒரு வருடகால பதிற்கடமையாற்றும் வேலைக்காலத்திற்கு உட்படுவார். அவ்வாறு பதிற் கடமையாற்றும் வேலைக்காலத்தில் வேலை நடத்தை மற்றும் வரவு திருப்திகரமானதென நியமன அதிகாரி திருப்தியுறுவாராயின் குறித்த அலுவலரின் நியமனம் உறுதிப்படுத்தப்படும். எனினும், அவர்கள் நியமனத் திகதியில் இருந்து மூன்று (03) வருடத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(ii) முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 வருடகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஒரு அலுவலரை மாற்றுவதற்கு தேவைப்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 05 வருடங்கள் கடந்து செல்ல முன் உரிய இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6.0 **தகைமைகள்**.- இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

6.1 **கல்வித் தகைமைகள்** : கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆகக்குறைந்தது, இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6.2 **தொழிற் தகைமைகள்** :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன்றாண்டு கால டிப்ளோமா பாடநெறியின் முதலாம் ஆண்டில் சித்திபெற்றிருத்தல்;

அல்லது

(ஆ) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று (03) வருடகால பாடநெறியில் முதலாம் ஆண்டில் சித்திபெற்றிருத்தல்.

6.3 **அனுபவம் :**

(அ) அரசாங்க சேவையின் திணைக்கள ரீதியான ஆரம்ப மட்ட தொழில்நுட்பம் சாராத (PL-01) சேவை வகுதியின் நூலக உதவியாளர்/நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் அப்பதவியில் 10 வருட முனைப்புடனான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(ஆ) மேற்கூறப்பட்ட 6.2 இன் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறிகளில் ஒன்றையேனும் பூர்த்திசெய்து, டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பின், அப்பரீட்சார்த்திகளுக்கு அரசாங்க சேவையின் திணைக்கள ரீதியான ஆரம்பத் தேர்ச்சியின்றி (PL-01) சேவை வகுதியின் நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று அப்பதவியில் முனைப்புடனான ஐந்து (05) வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

**குறிப்பு :**

1. (i) இதற்கான அதிகபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது ;

   (ii) மேற்படி (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இப் போட்டிப் பரீட்சையில் அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே தோற்ற முடியும். (மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.)

2. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

3. எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அரசாங்க சேவையில் (மேலே 6.3 அ மற்றும் ஆ இல் குறிப்பிடப்பட்டுள்ள) பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். 01/2020 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு ஏற்ப ஒழுக்காற்றுத் தண்டனையொன்றினை பெற்றிருக்கக்கூடாது என்பதோடு அது பற்றி திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7.0 **பரீட்சை நடைமுறை.-** இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடம் | நேரம் | மொத்த புள்ளிகள் | சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (2) நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| (3) பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அமைந்துள்ளது :-

7.1 (01) **நூலகவியல்.-**

(1) **நூலகங்களும் நூலகத்துவமும் :**

நூலகங்களும் நூலக வரலாறும்

நூலகங்களின் அங்கத்தவர்களது தொழிற்பாடு

நூல்கள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் மற்றும் ஆவணம், அச்சிடப்படாத ஊடகங்களின் ஆரம்பம் மற்றும் ஒலி/ஒளிபரப்பு

அறிஞர்களின் தொழிற்சங்கங்கள்

இலங்கை நூலகச் சங்கம்

அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நூலகச் சங்கம்

நூலகங்களின் வகைகள் :

பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவன நூலகங்கள் ;

அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள நூலகங்கள் ;

பொது நூலகங்கள்.

நூலகக் குழுக்கள் :

பேணிப் பாதுகாத்தலும் (Conservation) காப்பீடும் (Preservation)

(2) ***அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும் :***

நூல் வகைப்படுத்தலும் அதன் குறிக்கோள்கள் மற்றும் பிரயோகங்கள்

நூல் வகைப்பாட்டின் கூறுகள்

டுயி தசமதான பகுப்பாக்கம்

பட்டியலாக்கமும் அதன் நோக்கங்களும்

(AACR2) பட்டியலாக்கச் சட்டக்கோவை

பதிவுகளும் நூல்களைப் பற்றிய விபரங்களும்

பட்டியலாக்கத்தின் வகைகள்

(3) ***நூலக வளங்களும் தகவல் சேவையும் :***

பல்வேறு நூலக வளங்கள்

நூலக வளங்களைத் தெரிவுசெய்தல் மற்றும் தெரிவு செய்யும் செயற்பாடுகள்

நூலீட்டலும் நூலீட்டல் செயற்பாடுகளும்

செயலாக்கம்

இருப்புக்களின் கணக்கெடுப்பும் அகற்றல் செயற்பாடுகளும்

(4) ***தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்*** (Information Communication Technology)

நூலக சேவைகள் மீதான கணினித் தொழில்நுட்பத்தின் தாக்கங்கள் :

* காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்.

7.2 (02) **நுண்ணறிவுத் தேர்வு**.- சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் சிக்கலான வினாக்கள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகித்தலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் விண்ணப்பதாரிகளுக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் : ஒரு (01) மணித்தியாலம்.

7.3 (03) **பொது அறிவு**.- தேசிய, பிராந்திய மற்றும் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்திகளின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் : ஒரு (01) மணித்தியாலம்.

**குறிப்பு** : நியமனத்திற்காக தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை கட்டாயமாகக் கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

8.0 **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் எந்தவொரு தபாலகம் அல்லது உப தபாலகத்தில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை எதிர்காலத் தேவைக்காக தன்வசம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.) இப்பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எந்தவொரு அறவீடும் அறவிடப்படமாட்டாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்படாததுடன் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.0 **விண்ணப்பங்கள்**.- ஏ4 (செ.மீ.21 x 29) (சாதாரண ஹாப்சீட்) அளவிலான தாளை உபயோகித்து,

(அ) இலக்கம் 1.0 முதல் இலக்கம் 3.4 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 4.0 முதல் அதனடுத்து வரும் பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கருதும் மொழியிலேயே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்யும் போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9.1 அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமையாத மற்றும் முழுமைப்படுத்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கவும், அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு, விண்ணப்பம் நிவர்த்தியாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் மீண்டும் நன்றாகக் கவனித்தல் வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்துக்கு உரித்தான பற்றுச்சீட்டின் நிழற் பிரதியை தன்வசம் வைத்திருப்பது பிரயோசனப்படும் என்பதோடு உரியவாறு விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தாது ஏற்படும் இழப்புக்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

9.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப் பங்களைச் சமர்ப்பித்திருப்பார்கள் என்ற பூர்வாங்கத் தீர்மானத்தின்படி, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னரோ குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் நிவர்த்தியாகப் பூரணப்படுத்திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென அறியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும்.

9.3 விண்ணப்பங்களை இட்டு அனுப்பி வைக்கின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)" எனக் குறிப்பிடவும்.

9.4 **பரீட்சைப் பெறுபேறு**.- இவ் அறிவித்தலின் 7.0 பந்தியின் குறிப்புகளுக்கமைய ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

10.0 உரிய முறையில் சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்து தான் சேவையாற்றும் திணைக்களத் தலைவரின் ஊடாக 2020, ஓகத்து மாதம் 24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதோடு, அதற்காகத் தத்தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவருக்கு முன்னமே சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. 1503,
கொழும்பு.

11.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின், அவ்விபரங்களுடன், பெக்ஸ் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் நிழற் பிரதியொன்றை அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதி/ பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்குரித்தான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

12.0 இந்நியமனத்துக்கு பரீட்சார்த்தி தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிப்பதற்கு திணைக்களத் தலைவர் சம்மதம் தெரிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சான்றிதழொன்றை திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

12.1 ***கையொப்பத்தை உறுதிப்படுத்தல்***.- விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

12.2 சகல உத்தியோகத்தர்களும் பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலே பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதே போன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை

அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு காரணத்தினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். எவ்வாறாயினும் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு முடியாத அவ்வாறான பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்படமாட்டாது.

14.0 **போலியான தகவல்களுக்கான தண்டனை.**-விண்ணப்பப்படிவங்களை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத்தன்மை இரத்துச்செய்யப்படலாம். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் போலியானது என தெரியவரும் சந்தர்ப்பத்தில் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

15.0 பரீட்சை நடாத்துவது தொடர்பாகவும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவது குறித்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்படவேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. அச்சட்டவிதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

16.0 இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து, இணங்கியொழுகுதல் வேண்டும்.

எஸ். ஆலோக்கபண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2020, யூலை 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)**

**LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE - 2019 (2020)**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் தெளிவாக எழுதவும்)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0 2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.

3.0 3.1 பால் : பெண் - 1
ஆண் - 0 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

3.2 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.3 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

4.0 சேவை விபரங்கள் :

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் நிறுவனத்தின் பெயர் :----.

4.2 அது உரித்தாகும் அமைச்சு அல்லது திணைக்களம் :-----.

4.3 உமது தனியாள் சேவையை பேணி வரும் அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவரை தெளிவாகக் குறிப்பிடவும் :----.

4.4 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.

4.5 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

4.6 தற்போது வகிக்கும் பதவியில் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா என்பது பற்றி ? :----.

4.7 சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் நிரந்தரப்படுத்துவதற்கு தகைமையடைந்த திகதி :----.

4.8 தற்போதைய பதவியின் சேவையை உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட கடிதத்தின் தொடர் இலக்கமும் திகதியும் :----.

5.0 கல்வித் தகைமைகள்.- பரீட்சை அறிவிப்பில் 6.2 இல் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமை பெறுவதற்கு தாங்கள் முதலாம் ஆண்டு சித்தி பெற்றுள்ள மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறி தொடர்பான விடயங்கள் :

(i) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

(ii) டிப்ளோமா பாடநெறியின் பெயர் :----.

(iii) முதலாம் ஆண்டு சித்தியடைந்த திகதி :----.

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உபதபால் அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.

(iii) செலுத்திய தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டு கழறாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) |

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யாதிருப்பதால் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதால் ஏற்படக்கூடிய இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் நிவர்த்தியாகப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

(ii) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(iii) மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கும் நான் கட்டுப்பட்டுள்ளேன் எனவும் சான்றுரைக்கின்றேன்.

(iv) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கும் .................................................... திரு./திருமதி/செல்வி என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் எனது முன்னிலையில் ......................... ......................... ஆந் திகதியில் தமது கையொப்பத்தையிட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) இவ்விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .................................... இத்திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் ;

(ii) அவர் அரசாங்க நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல், அப்பதவியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னரான ஐந்து (05)/ பத்து (10) வருடங்களுக்கு முனைப்புடனான சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியிருப்பதாகவும் ;

(iii) நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியின் சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதமொன்று அவருக்கு வழங்கியிருப்பதாகவும் ;

(iv) அவர் 01/2020 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனை ஏதும் பெறவில்லை எனவும் ;

(v) இப்பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய நியமனம் ஒன்றிற்கு தெரிவுசெய்யப்பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் ;

(vi) அவரின் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள ஆவணங்களுடன் இணங்கியதாக உள்ளது எனவும், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின்படி அவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----
திணைக்களத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு** :

* திணைக்களத் தவைர் அல்லது அவருக்குப் பதிலாகக் கையொப்பமிடுவதற்கு உரிய வகையில் அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை அலுவலரொருவரால் மட்டும் இச்சான்றிதழ் கையொப்பமிடப்படல் வேண்டும். விண்ணப்பத்தில் உள்ளடங்கும் விடயங்கள் எல்லா வகையிலும் சரியானது என சான்றிதழை வெளியிடும் அலுவலர் திருப்தியுறுதல் வேண்டும்.

* தகைமைக்குரிய சகல தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களின் விண்ணப்பங்களைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படலாகாது.

7-688

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.